## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 107/2010**

திரு.சின்னசாமி (D.W –1) **04.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. பி.வா.சா.ஆ–5 ஆவணம் ஏற்படுத்திக் கொண்டபோது அந்த சொத்திற்கு உரிய முந்தைய அசல் உரிமையாவணத்தை வாங்கி பார்த்தீர்களா என்றால் பார்த்தேன் நகல் கொடுத்தார். அதை பார்த்து கிரயம் செய்தோம். அது என்ன ஆவணம் என்றால் நான் பார்த்தது பெரியசாமி மற்றும் சாமியப்பன் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் சான்றிட்ட நகல். அது எந்த வருடத்திய பத்திரம் என்றால் ஞாபகம் இல்லை. அந்த ஆவணத்தில் தாவா சொத்துக்கள் இல்லாமல் வேறு சொத்துக்கள் பற்றியும் சொல்லப்பட்டு இருந்ததா என்றால் தாவா சொத்தைப் பொறுத்து மட்டும்தான் சொல்லப்பட்டிருந்தது.

2. பி.வா.சா.ஆ–5 ஆவணத்தை கிரைய பெறும் போது பார்த்த சான்றிட்ட உரிமையாவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். முதல் விசாரணை வாக்குமூலத்துடன் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் ஆமாம். அந்த ஆவணத்தின் படி தாவா சொத்து இல்லாமல் வேறு சொத்துக்கள் பொருத்தும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை. ஆவணத்தை படித்துப் காண்பித்தால் புரிந்து கொள்வீர்களா என்றால் புரிந்து கொள்வேன். பி.வா.சா.ஆ–1 சொத்துவிவரத்தை படித்து காண்பித்தபோது அது சரி என்று சாட்சி ஒத்துக்கொண்டார். அந்த சொத்துவிவரத்தில் கிரையம் செய்யப்பட்ட சொத்து 24/1 பங்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. பி.வா.சா.ஆ–2 ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் அதைப் பற்றி தெரியாது.பி.வா.சா.ஆ–2 ன்

அடிப்படையில் ஏற்பட்ட பி.வா.சா.ஆ– 3 ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்கள் அதைப் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

3. 1966 ஆம் வருடம் 24 ல்ஒரு பங்கு உள்ள சொத்தை 100 ஏக்கர் சேர்ந்து பிரித்துக் கொண்ட விவரம் தெரியுமா என்றால் பெரிய கரார் ஏற்பட்ட விவரம் தெரியும் மற்ற முழு விவரங்கள் தெரியாது. 1966 கரார் பத்திரம் ஏற்பட்டதின் அடிப்படையில் தான் கொண்டாக் கவுண்டரிடமிருந்து சொத்துக்கள் கிரையம் பெற்றீர்கள் என்றால் சரி. தாவா சொத்தில் ஒரு பகுதியை கிரயம் பெறுவதற்கு முன்பு கரார் பத்திரத்தை பார்த்தேன் என்றால் ஆமாம். 24.10.1969 ஆம் தேதி ராமசாமியின் என்னுடைய அப்பாவுக்கு அம்மாசிக்கு தாவா சொத்துக்களை கிரையம் பெற வேண்டாம் என்று சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது.

4. வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிறகு தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை கிரயம் பெற்றுள்ளதால் இதற்கு முன்பு நடந்த சார்பு நீதிமன்ற வழக்கில் எங்களுடைய கிரயம் நல்லெண்ணத்தில் ஏற்படவில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாவில் ஏ அட்டவணை சொத்தாக என்ன சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்தில் அவரது பெற்றோர், சகோதரருக்கு எதிராக அவருக்கு பாத்தியப்பட்ட ⅙ பங்கு கேட்டுள்ளார் என்றால் தெரியாது.

5. வா.சா.ஆ–5 ல் சொல்லப்பட்டுள்ள வழக்கில் வாதிக்கு ⅙ பங்கான 1.82 ஏக்கர் சொத்து ஒதுக்கப்பட்டு முதல் நிலை தீர்ப்பாணை ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது.அதனால் வாதிக்கு தாவா சொத்தான 0.41 முழுமையாக பாத்தியப்பட்டது என்றால் இல்லை. கொண்டா கவுண்டர் வகையறா அவர்களுக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களை இந்த தாவா தாக்கல்

செய்வதற்கு முன்பே விற்பனை செய்து விட்டார்கள் என்றால் தெரியாது. இன்றைய தேதி வரை எங்களுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட 0.41 சென்ட் நிலத்தில் கொண்டாக் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 1/6 பாகம் மட்டும்தான் கிரையாவணம் செல்லும் என்று உத்தரவு ஏற்பட்ட பிறகு அந்த சொத்தைப் பொறுத்து ஏற்படுத்த என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் தெரியாது.

6. தாவா சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் இல்லை. தாவா சொத்தை பொருத்து மோசடியாக கிரையம் ஏற்பட்டதால் தான் இந்த விவரங்கள் எல்லாம் எனக்கு தெரியவில்லை என்றால் தவறு. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட பி அட்டவனை சொத்தில் எங்களுக்கு எந்த ஒரு உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா வாதி கோரிய படி தீர்ப்பாக வேண்டும் என்றால் தவறு.

நீதிமன்ற அனுமதியுடன் 19 ம் பிரதிவாதி வாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

19 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

19 ம் பிரதிவாதி இராமசாமி வாரிசு தாரர் என்ற அடிப்படையில் தாவா சொத்தில் ⅓ பாகம் பெற அருகதை உடையவர் என்றால் எனக்கு தெரியாது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d.கே.ஆர்.கண்ணன்.
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.